FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூலை - 2017
## Term Examination, July - 2017

| தரம் :- 12 (2018) | பொதுச் சாதாரணப் பரீட்சை | இரண்டு மணி முப்பது நிமிடம் |
| --- | --- | --- |

**கவனிக்க:**

❖ 1 - 60 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, விடைத்தாளில் அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையப் புள்ளடி (✕) இடுக.

01) 2017 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதார மாநாடு நடைபெறுகின்ற நாடு
(1) சுவிற்சலாந்து (2) யப்பான் (3) சீனா
(4) இந்தியா (5) ஐக்கிய இராச்சியம்

02) 2017 ஆம் ஆண்டில் சார்க் அமைப்பின் கலாசார நிலையம் அமைக்கப்படுகின்ற மாவட்டம்
(1) கொழும்பு (2) பதுளை (3) கண்டி
(4) அம்பாந்தோட்டை (5) மாத்தறை

03) அண்மைக் காலமாக நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இன்புளுவென்சா வகை *A* இனால் பீடிக்கப்பட்டும், பலர் இறந்தும் இருப்பதாக அறியப்பட்டது. இக்குறித்த வைரசு இனம்
(1) H1N1 (2) H2N2 (3) H3N2 (4) H5N1 (5) H7N7

agaram.lk

04) 2016 ஏப்ரல் மாதத்தில் எகிப்து ஒரு கடலில் உள்ள திரான், சனாபிர் என்னும் இரண்டு தீவுகளை சவுதி அரேபியாவுக்கு வழங்கியது. அக்கடல்
(1) செங்கடல் (2) சாக்கடல் (3) மஞ்சட்கடல்
(4) கரீபியன் கடல் (5) கருங்கடல்

05) 2017 பெப்ருவரி மாதத்தில் சிலாண்டியா (Zealandia) என்னும் ஒரு புதிய கண்டம் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அது எந்நாட்டுக்கு அடியில் மூழ்கிக் கிடக்கின்றது?
(1) அயர்லாந்து (2) பின்லாந்து (3) நியூசிலாந்து
(4) நெதர்லாந்து (5) இங்கிலாந்து

06) தெற்காசியாவில் சிறந்த வளித் தரத்தைக் கொண்ட நாடு இலங்கை என 2017 பெப்ருவரி மாதத்தில் அறிக்கை வெளியிட்டது
(1) IMF (2) UNESCO (3) WHO (4) UNIDO (5) UNICEF

07) இலங்கையில் உள்நாட்டு விமான நிலையம் நிறுவப்பட இருக்கும் மாவட்டம்
(1) கேகாலை (2) பொலநறுவை (3) மாத்தளை
(4) பதுளை (5) புத்தளம்

08) 2017 பெப்ருவரி மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையினால் பஞ்சம் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட நாடு
(1) லிபியா (2) தெற்கு சூடான்
(3) ஏமன் (4) சோமாலியா
(5) வடகிழக்கு நைஜீரியா

09) டொனால்ட் ட்ரம்ப் பற்றிப் பின்வருவனவற்றில் எது **பொய்யானது?**



(1) அவர் ஐக்கிய அமெரிக்க அரசுகளின் சனாதிபதியாவார்.
(2) அவர் பொருளாதாரப் பட்டதாரியாவார்.
(3) அவருடைய தந்தை ஒரு வர்த்தகராவார்.
(4) அவர் திரைப்படத்தில் நடித்தார்.
(5) அவர் திருமணம் புரியவில்லை.

10) 2016 டிசெம்பர் மாதத்தில் இமோமெலி ரஹ்மான் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். அவர் எந்நாட்டின் சனாதிபதி ஆவார்?
(1) சீனா (2) மாலைதீவு (3) ஈரான்
(4) சவுதி அரேபியா (5) தஜிகிஸ்தான்

11) இலங்கை இராணுவம் ஐ. நா. அமைதி காக்கும் படைக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் 2017 ஆம் ஆண்டில் அனுப்பி வைக்கப்பட்ட நாடு
(1) பிஜி (2) மாலி (3) கென்யா
(4) ஹெயிட்டி (5) காம்பியா

12) 2016 ஆம் ஆண்டில் இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்ற பொப்டைலான்
(1) சனாதிபதி ஆவார்.
(2) எழுத்தாளர் ஆவார்.
(3) திரைப்பட இயக்குநர் ஆவார்.
(4) பாடகர் ஆவார்.
(5) நகைச்சுவையாளர் ஆவார்.

13) நீண்ட காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பொருளாதாரத் தடையை அண்மையில் அமெரிக்கா எந்நாட்டின் மீது விலக்கியது?
(1) ரஷ்யா (2) எகிப்து (3) மியன்மார்
(4) இத்தாலி (5) வட கொரியா

agaram.lk

14) 2017 மார்ச் மாதத்தில் பாரிய மண்சரிவு ஏற்பட்டு 250 இற்கும் மேற்பட்டோர் பலியாகிய நாடு
(1) கொலம்பியா (2) மெக்ஸிகோ (3) பிரேசில்
(4) ஆர்ஜென்டீனா (5) வெனிசுவெலா

15) 2017 ஆம் ஆண்டில் மிகச் சிறந்த திரைப்படத்திற்காக ஒஸ்கார் விருதினைப் பெற்றது பின்வருவனவற்றில் எது?
(1) லா லா லேண்ட் (2) மூன் லைட் (3) பைபர்
(4) சூசைட் ஸ்குவாட் (5) தி சேல்ஸ்மேன்

16) 2016 நவம்பர் மாதத்தில் பிரேசிலைச் சேர்ந்த காற்பந்தாட்ட வீரர்கள் 22 பேரின் உயிரிழப்புக்குக் காரணமான விமான விபத்து இடம்பெற்ற நாடு
(1) இந்தோனேசியா (2) மொரக்கோ (3) மோல்டோவா
(4) மலேசியா (5) கொலம்பியா

17) உலக சுகாதார அமைப்பின் அறிக்கைப்படி வளி மாசினால் இலங்கையில் ஆண்டுதோறும் உயிரிழக்கும் மக்களின் எண்ணிக்கை
(1) 6 000 இற்குக் கீழ்
(2) 6 000 இற்கும் 7 000 இற்கும் இடையே
(3) செப்பமாக 7 000
(4) 7 000 இற்கும் 8 000 இற்கும் இடையே
(5) 8 000 இற்கு மேல்

18) 2017 மார்ச் மாதத்தில் உச்ச நீதிமன்றத்தால் ஒரு நாட்டின் சனாதிபதி பார்க் கியுன் ஹே பதவி நீக்கம் செய்யப்பட்டார். அந்நாடு

(1) எகிப்து (2) மலேசியா (3) தென்கொரியா
(4) மியன்மார் (5) லிதுவேனியா

19) தற்போது இலங்கையில் அமைக்கப்பட்டு வரும் திரவ இயற்கை எரிவாயு அனல் மின் நிலையம் உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தின் அளவு (மெகா வாற்) யாது?

(1) 100 (2) 300 (3) 500 (4) 700 (5) 900


20) 2018 ஆம் ஆண்டில் உலகக் கிண்ண காற்பந்தாட்டப் போட்டிகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள நகரம் எது?

(1) லண்டன் (2) பேர்ளின் (3) டோக்கியோ
(4) மொஸ்கோ (5) ரியோ டி ஜெனிரோ

21) சதுரமுகி ஒன்றின் பக்க நீளம் இரு மடங்காக அதிகரிக்கப்பட்டால் அதன் மொத்த மேற்பரப்பளவு அதிகரிக்கப்படுவது

(1) 1 மடங்கால் (2) 2 மடங்கால் (3) 3 மடங்கால்
(4) 4 மடங்கால் (5) 6 மடங்கால்

22) உருவில் சிறிய சதுரம் ஒன்று பெரிய சதுரம் ஒன்றினுள் வரையப்பட்டுள்ளது. நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவும் நிழற்றப்படாத பகுதியின் பரப்பளவும் சமமெனின் பெரிய சதுரத்தின் பரப்பளவுக்கும் சிறிய சதுரத்தின் பரப்பளவுக்கும் இடையிலான விகிதம்



(1) $\frac{\sqrt{2}}{1}$ (2) $\frac{2}{1}$ (3) $\frac{2\sqrt{2}}{1}$
(4) $\frac{2}{\sqrt{2}-1}$ (5) $\frac{1}{1}$


agaram.lk

23) $R, S, T$ என்பன $RT = 2\,RS$ ஆகுமாறு உள்ள புள்ளிகள் ஆகும். பின்வருவனவற்றில் எவை சரியானவை?

I $R, S, T$ என்பன ஒரு செங்கோண முக்கோணியின் உச்சிகள் ஆகும்.
II $R, S, T$ என்பன ஒரு சதுரத்தின் மூன்று உச்சிகள் ஆகும்.
III $R, S, T$ என்பன ஒரு வட்டத்தின் பரிதி மீதுள்ள மூன்று புள்ளிகள் ஆகும்.

(1) I மட்டும் (2) III மட்டும் (3) I, II மட்டும்
(4) I, III மட்டும் (5) I, II, III


24) ஒரே சதுரமுகியின் மூன்று தோற்றங்கள் இங்கு காணப்படுகின்றன. × இற்கு எதிரேயுள்ள குறியீடு யாது?






(1) (2) (3) (4) (5)

25) உரு I இல் காணப்படும் கூறுகளிலிருந்து முழுமையான வடிவங்களில் எதனைச் செய்யலாம்?





(1) (2) (3) (4) (5)

26) ஒரு புகையிரதம் நகர் $A$ இலிருந்து நகர் $B$ இற்கு $60\ km\ h^{-1}$ என்னும் சராசரிக் கதியில் 3 மணித்தியாலம் 30 நிமிடத்தில் செல்கின்றது. இப்புகையிரதம் $50\ km\ h^{-1}$ என்னும் சராசரிக் கதியில் திரும்பி வருமெனின், திரும்பி வரும் பயணத்திற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்?

(1) 2 மணித்தியாலம் 55 நிமிடம்

(2) 3 மணித்தியாலம் 40 நிமிடம்

(3) 3 மணித்தியாலம் 48 நிமிடம்


(4) 4 மணித்தியாலம் 12 நிமிடம்

(5) 4 மணித்தியாலம் 32 நிமிடம்

27) ஒரு குறித்த பிள்ளைகளுக்கு 150 அப்பிள்களும் 105 கொய்யாப் பழங்களும் சமனாக பங்கிடப்பட்டன. அப்பிள்களோ கொய்யாப் பழங்களோ மீதியாகவில்லை. இருக்கக் கூடிய பிள்ளைகளின் அதி கூடிய எண்ணிக்கை

(1) 3 (2) 5 (3) 15 (4) 30 (5) 40

28)




இங்கு செவ்வகம் $ABCD$ இனுள்ளே உள்ள எல்லா செவ்வகங்களும் ஒன்றுக்கொன்று சமனானவை ஆகும். $BC = 30\ cm$ எனின் $AB$ இன் நீளம் ($cm$ இல்)

(1) 25 (2) 30 (3) 40

(4) 45 (5) 50

29) 2000 ஏப்ரல் மாதத்தில் 5 ஞாயிற்றுக்கிழமைகள் உண்டு. அவற்றில் 3 ஞாயிற்றுக்கிழமைகளின் திகதி எண்கள் இரட்டை ஆயின் ஏப்ரல் 8 என்ன கிழமையாகும்?

(1) ஞாயிற்றுக்கிழமை (2) திங்கட்கிழமை (3) செவ்வாய்க்கிழமை

(4) வியாழக்கிழமை (5) சனிக்கிழமை


30) $A, B, C$ என்பன முழு எண்கள் ஆகும். அவற்றின் கூட்டுத்தொகை 105 ஆகும். $B$ ஐ விட $A$ 20% ஆல் கூடியதாகும். $B$ ஐ விட $C$ 20% குறைந்ததாகும். $C$ இன் பெறுமானம்

(1) 28 (2) 30 (3) 37 (4) 42 (5) 49

31) குறித்த ஒரு திரவ வகையில் ஒரு லீற்றரின் திணிவு 700 கிராம் ஆகும். இத்திரவ வகையில் 5 லீற்றர், இன்னொரு திரவ வகையில் குறித்தவொரு கனவளவுடன் கலக்கப்பட்டது. இரண்டாவது வகை திரவத்தின் ஒரு லீற்றர் 1 கிலோகிராம் திணிவுடையதாகும். நன்கு கலக்கப்பட்டுள்ள இக்கலவையின் ஒரு லீற்றர் 800 கிராம் திணிவு உடையதாகும். கலக்கப்பட்ட இரண்டாவது வகைத் திரவத்தின் கனவளவு

(1) 1 (2) 1.5 (3) 2 (4) 2.5 (5) 3

32) இவ் எண்கோலத்தில் வெற்றிடத்தில் வரவேண்டிய எண் யாது?




(1) 16 (2) 18 (3) 20 (4) 22 (5) 24

agaram.lk

33) $A - Z$ வரையான ஆங்கில எழுத்துகளில் எது பின்வரும் வரிப்படத்தில் உள்ளடங்கவில்லை?



(1) *E* (2) *H* (3) *L* (4) *P* (5) *R*

34) 9 மனிதர்கள் 6 நாட்கள் வேலை செய்து ரூ 27 000 ஐ மொத்தக் கூலியாகப் பெற்றனர். ஒரு மனிதனின் ஒரு நாட் கூலி எவ்வளவு?

(1) ரூ 400 (2) ரூ 500 (3) ரூ 700

(4) ரூ 800 (5) ரூ 1 000

❖ ***35, 36, 37* ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.**

**ஒரு பல்கலைக்கழகத்தில் J, K, L, M, N, O, P என்னும் ஏழு கூட்டங்கள் ஒரு ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வாரத்தின் ஒவ்வொரு நாளும் ஒரு கூட்டம் வீதம் நடத்தப்பட வேண்டும்.**

- **கூட்டம் J ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட வேண்டும்.**
- **கூட்டம் K ஆனது L, M ஆகிய இரு கூட்டங்களுக்குப் பின்னர் நடத்தப்பட வேண்டும்.**
- **N, O, P ஆகிய கூட்டங்கள் மூன்று அடுத்துவரும் நாட்களில் நடைபெற வேண்டிய அதே வேளை அம்மூன்று கூட்டங்களும் N, O, P ஆகிய ஒழுங்கு வரிசையில் நடைபெற வேண்டியதில்லை.**

35) கூட்டம் L நடத்தப்படத்தக்க வாரத்தின் இறுதி நாள் (latest day) யாது?

(1) செவ்வாய்க்கிழமை

(2) புதன்கிழமை

(3) வியாழக்கிழமை

(4) வெள்ளிக்கிழமை

(5) சனிக்கிழமை

agaram.lk

36) கூட்டங்கள் நடத்தப்படும் வரிசை தொடர்பாகப் பின்வருவனவற்றில் எது உண்மையாக இருத்தல் வேண்டும்?


(1) J இற்குப் பின்னர் L நடத்தப்படுகின்றது.
(2) O இற்குப் பின்னர் L நடத்தப்படுகின்றது.
(3) O இற்குப் பின்னர் N நடத்தப்படுகின்றது.
(4) P இற்குப் பின்னர் N நடத்தப்படுகின்றது.
(5) P இற்குப் பின்னர் O நடத்தப்படுகின்றது.

37) பின்வருவனவற்றில் எதன் மூலம் மூன்று அடுத்துவரும் நாட்களில் கூட்டங்கள் நடத்தப்படத்தக்க ஒழுங்குமுறை காட்டப்படுகின்றது?


(1) JMK (2) KLO (3) MNJ (4) OJN (5) POM

38) $A, B, C$ ஆகிய மூன்று கடிகாரங்கள் முறையே ஒவ்வொரு 6, 9, 12 நிமிடங்களின் முடிவில் ஒலிக்கும். இவை முறையே மு. ப. 7.48, மு. ப. 7.51, மு. ப. 7.54 ஆகிய நேரங்களில் ஒலித்தனவாயின் காலை 9.00, காலை 10.00 ஆகிய நேரங்களுக்கு இடையில் அவை ஒரே தடவையில் ஒலிக்கும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 1 (2) 2 (3) 3 (4) 4 (5) 5

39) 

இவ் உருவானது பக்க நீளம் $1\,cm$ உடைய 3 சதுரங்களைக் கொண்ட ஒரு வடிவம் ஆகும். இவ்வாறான 50 வடிவங்கள் பின்வருமாறு ஒரு கோலத்தில் அமைக்கப்பட்டு உள்ளன.




agaram.lk


இக்கோலத்தில் பெறப்படும் தளவுருவின் சுற்றளவு ($cm$ இல்)

(1) 100 (2) 102 (3) 200 (4) 202 (5) 204

40) செவ்வக வடிவிலான சீரான ஓர் இரும்புத் தகட்டின் $(ABCD)$ திணிவு $28\,kg$ ஆகும். $E$ இலிருந்து $D, C$ ஆகியவற்றுக்குள்ள தூரம் சமனாவதுடன் $F$ இலிருந்து $C, B$ ஆகியவற்றுக்குள்ள தூரமும் சமனாகும். நிழற்றப்பட்ட பகுதியின் $(AEFB)$ திணிவு ($kg$ இல்)




(1) $16\frac{1}{2}$ (2) 17 (3) $17\frac{1}{2}$
(4) 18 (5) $18\frac{1}{2}$

41) 

உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை

(1) 9
(2) 10
(3) 11
(4) 12
(5) 13

❖ ***42, 43 ஆகிய வினாக்கள் பின்வரும் விவரணத்தை அடிப்படையாய் கொண்டவை.***

**ஒரு சினிமாக் கம்பனி கீழே தரப்பட்டுள்ள மூன்று திரைப்படங்களைத் தயாரிப்பதற்கு உத்தேசித்துள்ளது.**

- **வெந்நீர்த் தடாகம்**
- **நன்னீர்த் தடாகம்**
- **உப்புநீர்த் தடாகம்**

**இக்கம்பனி ஒரு நடிகர், ஒரு நடிகை, ஓர் இசைக்கலைஞர், ஓர் ஒளிப்படக் கலைஞர், ஒரு பதிப்பாசிரியர் ஆகியோர் இடம்பெறும் தனது சொந்தக் குழுவைக் கொண்டுள்ளது. கம்பனி கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவர்களுடைய கோரிக்கைகளையும் நிபந்தனைகளையும் கருதிய பின்னர் கம்பனி அவர்களை அத்திரைப்படங்களுக்காக அமர்த்தி ஏனைய கலைஞர்களை வெளியேயிருந்து அமர்த்திக் கொள்ளும்.**

(a) நடிகை ஒரு திரைப்படத்தில் மாத்திரம் நடிப்பார்.

(b) வெந்நீர்த் தடாகத்தில் நடிகர் நடித்தால், நடிகை அதில் நடிக்க மாட்டார்.

(c) இசைக்கலைஞர் உப்புநீர்த் தடாகத்திற்கு இசையமைப்பார்.

(d) நடிகர் அல்லது ஒளிப்படக்கலைஞர் உப்புநீர்த் தடாகத்திற்குப் பணியாற்றுவார்.

(e) ஒளிப்படக் கலைஞரும் இசைக்கலைஞரும் ஒரே திரைப்படத்தில் பணியாற்றுவதற்கு மறுப்பர்.

42) பின்வருவனவற்றில் எது ஓர் இயல்தகு பணிப் பொறுப்பாகும்?

| | **வெந்நீர்த் தடாகம்** | **நன்னீர்த் தடாகம்** | **உப்புநீர்த் தடாகம்** |
|---|---|---|---|
| (1) | நடிகர், நடிகை, பதிப்பாசிரியர் | நடிகர், இசைக்கலைஞர், பதிப்பாசிரியர் | இசைக்கலைஞர், ஒளிப்படக்கலைஞர், பதிப்பாசிரியர் |
| (2) | நடிகை, ஒளிப்படக்கலைஞர், பதிப்பாசிரியர் | நடிகர், ஒளிப்படக்கலைஞர், பதிப்பாசிரியர் | நடிகை, இசைக்கலைஞர், பதிப்பாசிரியர் |
| (3) | நடிகர், ஒளிப்படக்கலைஞர், பதிப்பாசிரியர் | நடிகர், ஒளிப்படக்கலைஞர், பதிப்பாசிரியர் | நடிகர், இசைக்கலைஞர், பதிப்பாசிரியர் |
| (4) | நடிகர், ஒளிப்படக்கலைஞர், பதிப்பாசிரியர் | நடிகர், இசைக்கலைஞர், பதிப்பாசிரியர் | நடிகர், நடிகை, பதிப்பாசிரியர் |
| (5) | நடிகர், ஒளிப்படக்கலைஞர், பதிப்பாசிரியர் | இசைக்கலைஞர், ஒளிப்படக்கலைஞர், பதிப்பாசிரியர் | நடிகை, இசைக்கலைஞர், ஒளிப்படக்கலைஞர் |

43) பின்வரும் பணிப் பொறுப்பைக் கருதுக.

| **வெந்நீர்த் தடாகம்** | **நன்னீர்த் தடாகம்** | **உப்புநீர்த் தடாகம்** |
|---|---|---|
| நடிகை<br>*a*<br>*b* | பதிப்பாசிரியர்<br>*c*<br>*d* | நடிகர்<br>இசைக்கலைஞர்<br>*e* |

பின்வருவனவற்றில் எது கட்டாயம் உண்மையானது?

(1) $a$ = ஒளிப்படக்கலைஞர்

(2) $b$ = இசைக்கலைஞர்

(3) $c$ = நடிகர்


(4) $d$ = நடிகை

(5) $e$ = பதிப்பாசிரியர்

agaram.lk

❖ ***44, 45 ஆகிய வினாக்கள் பின்வரும் வரைபுகளைப் பற்றியனவாகும்.***

**2000 ஆம், 2001 ஆம் ஆண்டுகளில் கம்பனி $X$ இன் $P, Q, R, S, T, U$ என்னும் ஆறு பிரிவுகள் ஒவ்வொன்றினாலும் மொத்த இலாபத்துக்கு அளிக்கப்பட்ட சதவீதத்தைப் பின்வரும் வரைபுகள் காட்டுகின்றன.**




**2000 ஆம் ஆண்டு**
**மொத்த இலாபம் = ரூ. 20,000,000**

**2001 ஆம் ஆண்டு**
**மொத்த இலாபம் = ரூ. 30,000,000**

44) 2001 ஆம் ஆண்டில் பிரிவு $U$ வினாலும் பிரிவு $T$ யினாலும் மொத்த இலாபத்துக்கு அளிக்கப்பட்ட தொகைகளின் சராசரி யாது?

(1) ரூ. 1,000,000 (2) ரூ. 1,500,000 (3) ரூ. 3,000,000
(4) ரூ. 4,500,000 (5) ரூ. 5,000,000

45) 2000 ஆம் ஆண்டிலும் பார்க்க 2001 ஆம் ஆண்டில் கம்பனியின் மொத்த இலாபத்துக்கு எத்தனை பிரிவுகள் கூடுதலாகப் பங்களிப்புச் செய்துள்ளன?

(1) 1 (2) 2 (3) 3 (4) 4 (5) 5

agaram.lk

❖ ***46, 47 ஆகிய வினாக்களுக்குப் பின்வரும் பந்தியை வாசிக்க.***

**சட்டத்தையும் ஏனையோரின் ஒழுக்க உரிமையையும் மதிப்பதற்கு மறுக்கும் சாரதிகளின் நாகரிகமற்ற நடத்தை காரணமாக வீதி விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே வீதியில் நடக்கும் விபத்தை ஒரு சமூகப் பிரச்சினையாகக் கருதலாம். உற்பத்தி நிலையிலும் வீதியில் செல்வதற்கான தகுதியை அறிவதற்கு இடையிடையே நடைபெறும் வீதிப் பரிசோதனையிலும் வாகனங்களுக்கான காப்பு நியமங்கள் மேம்படுத்தப்படுகிறது. அத்துடன் கதி மட்டுப்பாடும் குறைக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகளின் விளைவாக விபத்து வீதம் குறைந்துள்ளது. ஆனால் சாரதிகள் நடந்து கொள்ளும் விதத்தில் குறைந்தளவு மேம்பாடு மாத்திரம் ஏற்பட்டுள்ளமை அல்லது மேம்பாடு ஏற்படாமை காரணமாக விபத்து தொடர்பான நிபுணர்கள் கவலையடைந்துள்ளனர்.**

46) பந்திக்கேற்ப போக்குவரத்து விபத்துகள் சமூகப் பிரச்சினையாகக் கருதப்படக் கூடியமைக்குக் காரணம்

(1) மோட்டார் வாகனம் ஒரு மிகவும் ஆபத்தான கண்டுபிடிப்பாக இருக்கின்றமை.
(2) பேரிடருள்ள சாரதிகளிலும் பார்க்கப் பேரிடருள்ள வீதி நிலைமைகள் காரணமாக விபத்துகள் ஏற்படுகின்றமை.
(3) போக்குவரத்து விதிகளில் கவனம் செலுத்தாத சாரதிகளினால் பெரும்பாலான விபத்துகள் ஏற்படுத்தப்படுகின்றமை.
(4) பெரும்பாலான விபத்துகள் ஏற்படுகின்றமைக்கான தவறுகளுக்குச் சாரதிகள் மாத்திரம் பொறுப்பாக இராமை.
(5) போக்குவரத்து விபத்துகள் கடும் பொருளாதாரச் சேதத்தை ஏற்படுத்துகின்றமை.

47) பந்திக்கேற்ப விபத்துகளின் எண்ணிக்கை குறைந்துள்ளமைக்குக் காரணம்

(1) காப்பான செலுத்துதலில் கணிசமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளமை.

(2) செலுத்துகை மாறாக் கவனமும் ஊன்றிய கருத்தும் தேவைப்படும் திறன் வாய்ந்த பணி என்பதைப் பலர் இப்போது அறிந்திருக்கின்றமை.

(3) சாரதிகள் வீதிகளில் கூடுதலான கவனஞ் செலுத்துமாறு எச்சரிக்கப் பட்டிருக்கின்றமை.

(4) சாரதிகள் எங்ஙனம் நன்றாகச் செலுத்தலாம் என்பது பற்றி இறுதியாக அறிந்திருக்கின்றமை.

(5) சாரதிகளின் மனப்பான்மையில் மேம்பாடு ஏற்பட்டிருக்கின்றமை.

48)
$$\begin{array}{cccc} & a & 2 & e \\ & 1 & b & d \\ + & f & 2 & c \\ \hline & 6 & 3 & 2 \\ \hline\hline \end{array}$$

பின்வரும் கூட்டற் கணக்கில் $a + 10b + c + d + e + f$ இன் பெறுமானம்


(1) 70 (2) 84

(3) 88 (4) 92

(5) 96

❖ ***49, 50 ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாய்க் கொண்டவை.***

**க.பொ.த. (உ.த.) பரீட்சையை அடிப்படையாய்க் கொண்டு கடந்த நான்கு ஆண்டுகளின் போது 15 இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வெவ்வேறு பாடத் துறைகளுக்கும் ஆண்டுதோறும் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைகள் பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளன.**




49) 2006/07 தொடக்கம் 2009/10 வரைக்கும் அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(1) வர்த்தகத் துறைக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் படிப்படியான அதிகரிப்பு உள்ளது.

(2) கலைத் துறைக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் படிப்படியான அதிகரிப்பு உள்ளது.

(3) பௌதிக விஞ்ஞானத் துறைக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் படிப்படியான அதிகரிப்பு உள்ளது.

(4) விஞ்ஞானத் துறையிலும் பார்க்கக் கலைத் துறைக்குக் கூடுதலான மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

(5) வர்த்தகத் துறையிலும் பார்க்கப் பௌதிக விஞ்ஞானத் துறைக்குக் கூடுதலான மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

50) பின்வரும் கூற்றுகளில் எது **சரியானதன்று**?

(1) கலைத் துறை, உயிரியல் விஞ்ஞானத் துறை ஆகிய இரண்டுக்கும் ஆண்டு தோறும் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு உள்ளது.

(2) வர்த்தகத் துறை, பௌதிக விஞ்ஞானத் துறை ஆகிய இரண்டுக்கும் ஆண்டுதோறும் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் ஏற்றவிறக்கம் உள்ளது.

(3) சில துறைகளுக்கு ஆண்டுதோறும் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் உள்ள ஏற்றவிறக்கம் காரணமாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் ஆண்டுதோறும் அதிகரிப்பு காணப்படவில்லை.

(4) 2009/10 இல் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை அதற்கு முந்திய ஆண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கையிலும் பார்க்க அதிகமாகும்.

(5) வர்த்தக, பௌதிக விஞ்ஞானத் துறைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் ஆண்டும் 5000 இலும் பார்க்கக் குறைந்த எண்ணிக்கையில் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

51) சதுர வடிவிலான $ABCD$ என்னும் தாளானது உச்சி $B$ ஆனது $DC$ இன் நடுப்புள்ளி $M$ இன் மீது பொருந்துமாறு மடிக்கப்பட்டுள்ளது. மடிப்புக் கோட்டினால் $BC$ ஆனது பிரிக்கப்படும் விகிதம்

(1) $\frac{1}{8}$ (2) $\frac{3}{8}$ (3) $\frac{5}{8}$ (4) $\frac{7}{8}$ (5) $\frac{1}{4}$

52) சுரேஸ் நாளாந்தம் ரூ. 40 ஐ யூனியன் கல்லூரியின் தேநீர்ச்சாலையில் பின்வருவனவற்றுள் சிலவற்றை வாங்குவதற்குச் செலவு செய்கின்றான்.


✶ எள்ளு உருண்டை ஒவ்வொன்றும் ரூ. 5
✶ கச்சான் அலுவா ஒவ்வொன்றும் ரூ. 5
✶ கட்லட் ஒவ்வொன்றும் ரூ. 10

அவன் குறிப்பிட்ட நாளொன்றில் தனது பணத்தை எத்தனை வழிகளில் செலவு செய்வான்?

(1) 20 (2) 24 (3) 25 (4) 30 (5) 50


agaram.lk


53) இவ் எண்கோலத்தில் இரண்டாவது நிரையின் கூட்டுத் தொகை 8 ஆகும். 10 ஆவது நிரையின் கூட்டுத்தொகை யாது?






(1) 800
(2) 900
(3) 950
(4) 1000
(5) 1100


54) கீழே உள்ள எல்லா உருக்களிலும் எவ் உரு ஏனையவற்றிலிருந்து வேறுபட்டது?


(1)



(2)


(3)


(4)


(5)

55) உருவில் கறுப்புப் பந்து ஒவ்வொரு மூலையினூடாக வலஞ்சுழியாக நகர, வெள்ளைப் பந்து ஒன்றைவிட்ட மூலைகளினூடாக இடஞ்சுழியாக நகருமெனின் மறுபடி இவ்விரு பந்துகளும் சந்திக்கும் புள்ளி யாது?




(1) A
(2) C
(3) D
(4) E
(5) G

56) **ஒரு குறித்த நாட்டில் ஒரு குறித்த தொழிலில் ஈடுபடுவதற்காகக் கடந்த இருபது ஆண்டுகளில் சான்றிதழ்களைப் பெற்றுள்ளவர்களில் பதினொரு வீதமானோர் பெண்களாவர். இக்காலத்தின் போது சான்றிதழ்களைப் பெற்ற அனைவருக்கும் முழுநேர வேலைகள் கிடைத்தன. எவ்வாறாயினும் தற்போது இத்தொழிலில் முழுநேர பதவிகளில் உள்ளவர்களில் ஐந்து வீதமானோர் மாத்திரம் பெண்களாவர்.**

பின்வரும் கூற்றுகளிடையே எது உண்மையாக இருப்பின், மேற்குறித்த சதவீதப் பெறுமானங்களுக்கிடையே உள்ள வித்தியாசத்தை விளக்குவதில் வெற்றியீட்டும்?

(1) தற்போதிலும் பார்க்க இருபது ஆண்டுகளுக்கு முன்னர் சான்றிதழ்களை எளிதாகப் பெறத்தக்கதாக இருந்தது.
(2) தற்போது இத்தொழிலில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலானோர் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் சேர்க்கப்பட்டனர். அக்காலத்தில் இத்தொழிலில் ஆண்கள் மாத்திரம் ஈடுபட்டனர்.
(3) கடந்த இருபது ஆண்டுகளின் போது சான்றிதழ்களைப் பெற்ற பெண்கள் ஆண்களிலும் பார்க்கத் தொழிலில் பல்வேறு விசேட துறைகளைத் தெரிந்தெடுத்திருந்தனர்.
(4) கடந்து இருபது ஆண்டுகளின் போது தொழிலில் ஈடுபட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான சம்பளங்கள் கொடுக்கப்பட்டன.
(5) தற்போது தொழிலில் முழுநேரப் பதவிகளில் ஐந்து வீதம் பெண்கள் இருக்கின்ற போதிலும் மேற்பார்வை மட்டத்தில் உள்ள பதவிகளில் இரண்டு வீதம் மாத்திரம் பெண்களாவர்.

agaram.lk

❖ ***57, 58 ஆகிய வினாக்கள் பின்வரும் பந்தியை அடிப்படையாகக் கொண்டவை.***

**தென்னையானது இலங்கையில் எல்லா மாவட்டங்களிலும் உள்ளடக்கி வளர்க்கப்படும் மூன்று பெருந்தோட்டப் பயிர்களில் ஒன்றாகும். தென்னை 394 386 ஹெக்ரெயர் பரப்பளவை உள்ளடக்கும் அதே வேளை நெல்லிற்கு இரண்டாவதாக உள்ளது. பெருந் தென்னை வளர்க்கும் பிரதேசங்கள் மேல் மாகாணம், வடமேல் மாகாணம், தென் மாகாணம் ஆகியனவாகும். வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டமும் புத்தளம் மாவட்டமும் கம்பஹா மாவட்டமும் (மேல் மாகாணத்தின் பகுதி) நாட்டின் மொத்தத் தென்னை வளர்க்கும் பிரதேசங்களின் 56.42% ஆக அமையும் அதே வேளை அவை தென்னை முக்கோணியை அமைக்கின்றன. பிரதேசத்தின் எஞ்சிய பகுதியில் (43.58%) தென் மாகாணமும் கிழக்கு மாகாணத்தினதும் வட மாகாணத்தினதும் பல பகுதிகளும் அடங்குகின்றன.**

57) பின்வரும் கூற்றுகளில் எது மேற்குறித்த பந்தியில் **வெளிப்படையாகக் குறிப்பிடப் பட்டிருக்கவில்லை**?

(1) தேங்காய் இலங்கையின் இரண்டாவது பிரதான உணவாகும்.
(2) தென்னை ஏக்கரளவிலும் பார்க்கக் கூடிய பரப்பளவில் நெல் பயிரிடப்படுகின்றது.
(3) மொத்தத் தென்னை வளர்க்கும் பரப்பளவில் 50% இற்கு மேற்பட்ட பகுதி மேல் மாகாணத்திலும் வடமேல் மாகாணத்திலும் உள்ளது.
(4) தென்னை தென் மாகாணத்தில் வளருகின்றது.
(5) தென்னை கிழக்கு மாகாணத்தில் வளருகின்றது.

**58)** பின்வரும் கூற்றுகளில் எது மேற்குறித்த பந்தியில் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது?

*(1)* தென்னை, திப்பிலிப்பனை (கித்துள்), பனை ஆகியன இலங்கையில் வளர்க்கப்படும் மூன்று பெருந்தோட்டப் பயிர்களாகும்.

*(2)* தென்னை "தென்னை முக்கோணி"ப் பிரதேசத்தில் மாத்திரம் வளர்கின்றது.

*(3)* தென்னை வட மாகாணத்தில் வளருகின்றது.

*(4)* தென் மாகாணம் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

*(5)* தென்னை முக்கியமாக ஒரு சிறுகாணி உரிமையாளரின் பயிராகும்.

**59)** ஒரு குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட ஐந்து படங்கள் தரப்பட்டுள்ளன. சரியான காலவரன் ஒழுங்குமுறையில் படங்கள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.



**A** **B** **C** **D** **E**

*(1) E A C D A* *(2) A E C D B* *(3) E A D C B*

*(4) A C E D B* *(5) E A C B D*

**60)** ஒவ்வொன்றும் மூன்று கூற்றுகளைக் கொண்ட ஐந்து குறுகிய பந்திகள் குழம்பிய விதத்தில் தரப்பட்டுள்ளன. மீள ஒழுங்குபடுத்தும் போது ஒரு தொடர் ஒழுங்குமுறையில் சம்பவங்களைக் கொண்ட பந்தியை இனங்காண்க.

A - தமரா மருந்துகளை மாத்திரம் கொண்டு தனது உடனலப் பிரச்சினையைச் சமாளிக்கிறார். அவருடைய மருத்துவர் தினமும் துரிதநடை உட்படத் தேகப் பயிற்சியைச் செய்யுமாறு தமராவுக்கு ஆலோசனை கூறினார். நோயைக் குணப்படுத்தும் ஒரு முறையாகத் தமரா இசையைச் செவிமடுக்கின்றார்.

agaram.lk

B - தொழிலாளர் ஒருவர் தனது தென்னந்தோப்பில் களைகள், புதர்கள், பற்றைகள் ஆகியவற்றைத் துப்புரவாக்கும் வேலையைச் செய்கின்றார். தென்னந் தோப்புத் தொழிலாளர்களுக்குத் தினமும் ரூ. 800 கூலி வழங்கப்படுகின்றது. தொழிலாளர் இரு உரிக்காத தேங்காய்களுடன் வீட்டிற்குச் செல்கின்றார்.

C - ரவி தான் வதியும் நுகேகொடை வீட்டுத் தொகுதியில் சூரிய ஒளி ஊடுருவல் போதாமல் இருப்பதனால் அவ்வீட்டுத் தொகுதியை விரும்பவில்லை. ரவி கிருலப்பனையில் அல்லது நுகேகொடையில் ஒரு வீட்டுத் தொகுதியைக் கொள்வனவு செய்வதற்காகச் செய்தித்தாள் விளம்பரங்களைப் பார்க்கின்றார். ரவியின் மகன் புதிய வீட்டுத் தொகுதிக்கு வீட்டுப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கு ஒரு காவும் முகவருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

D - அணியின் தலைவராக அமைந்த உதவித் தலைவர் தனது தலைமைத்துவத்தையும் அணியின் பணியையும் நிரூபிப்பதற்குச் சவால் மிக்க பொறுப்பைக் கொண்டுள்ளார். நாணயச் சுழற்சியின் பின்னர் இலங்கை அணி களத் துடுப்பாட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டது. முதலாவதாகத் துடுப்பாட்டத்தில் ஈடுபட்ட அணி 19.4 ஓவர்களின் இறுதியில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றது.

E - ஞாயிற்றுக்கிழமைச் செய்தித்தாள்களைத் தவிரத் தினசரிச் செய்தித் தாள்கள் சாதாரண பிரசைகளால் வாங்கப்பட இயலும். நாடளாவிய சில்லறைக் கடைகளில் செய்தித் தாள்களை வாங்கலாம். செய்தித் தாள்கள் வாசித்தலை இலங்கைப் பிரசைகள் ஒவ்வொருவரும் ஒரு முக்கிய பழக்கமாகக் கொண்டுள்ளனர்.

*(1) A* *(2) B* *(3) C* *(4) D* *(5) E*